டாக்டர் மா. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் கடந்த டாக்டர் கலைஞர் அவர்களுடைய அரசில் செயல்பட்ட ஒரு திட்டமாகும். இந்தத் திட்டம் சீர்காழி போன்ற கடைமடைப் பகுதியில் மூன்றாவது போகமாக குள்ளக் கார் என்ற சாகுபடி நடைபெறும். அப்போது தண்ணீர் பற்றாக்குறை இருக்கின்ற காரணத்தினால் வடரங்கத்தில் இருந்து கிடைக்கின்ற உபரி நீர், ஊற்றுநீரை ராட்சச என்ஜின் வைத்து இறைத்து அந்தப் பகுதி மக்கள் பாசனத்துக்குப் பயன்படுத்தினார்கள். டாக்டர் கலைஞர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் தொடங்கிய அந்தத் திட்டத்தை மீண்டும் மறுபரிசீலனை செய்து அந்தத் திட்டத்தை ஏற்படுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1974 ஆம் ஆண்டு இப்படி ஒரு திட்டத்தை செயல்படுத்தலாமா என்று அரசு யோசித்தது. அதற்கு செலவு அன்றைய மதிப்பீட்டின்படி கிட்டத்தட்ட ரூ. 70 இலட்சம் என்று கணக்கிடப்பட்டது. ஆனால் அரசுக்கு வருகிற வருவாய்க்கும் இந்தச் செலவுக்கும் பெருத்த வித்தியாசம் இருப்பதால் அது சரிபட்டு வராது என்று அரசு அப்போது கைவிட்டு விட்டது. மேலும் காவிரி ஆற்றில் கடந்த 10 ஆண்டுகளாக பாசனத்துக்குத் தண்ணீர் போதிய அளவுக்குக் கிடைக்கவில்லை. காவிரி டெல்டா பகுதிகளுக்கு ஜூன் மாதத்திற்கு பதிலாக ஆகஸ்ட் மாதம்தான் தண்ணீர் விடப்படுகின்ற நிலைமை உருவாகி இருக்கிறது. எனவே கொள்ளிடத்தில் உபரி நீரை எதிர்பார்க்க இயலாது. இருப்பினும் 1975 ஆம் ஆண்டு, 75 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் ஒரு தண்ணீர் தொட்டி கட்டப்பட்டிருக்கிறது. அதோடு இரண்டு அடி விட்டமுள்ள குழாய் இரண்டு வரிசைகளாகப் பதிக்கப் பட்டிருக்கின்றன. கோடை கால பற்றாக்குறையின்போது ஆயக்கட்டுகளுக்கு தண்ணீர் இறைத்திடுவதற்கு இந்தத் திட்டம் பயன்படும் என்று அரசு கருதியது.

டாக்டர் மா. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வாணியாறு மற்றும் ஈச்சம்பாடி அணைக்கட்டுத் திட்டங்கள்

*5984—திரு. வ. முல்லைவேந்தன்; மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா;

(அ) தருமபுரி மாவட்டத்தில் உள்ள வாணியாறு மற்றும் ஈச்சம்பாடி அணைக்கட்டுத் திட்டங்களுக்கு மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு?

(ஆ) அதன் விவரம் என்ன?

1990 சனவரி 22]

மாண்புமிகு திரு. துரைமுருகன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) வாணியாறு நீர்த்தேக்க திட்டத்திற்கு அரசு ஆணை (நிலை) எண். 284, பொதுப்பணித் துறை, நாள் 20—2—1979-ல் ரூபாய் 560 இலட்சத்திற்கு ஒப்புதல் வழங்கப்பட்டது. மீண்டும் அதற்கு, திருத்திய மதிப்பீட்டின் அடிப்படையில் அந்தத் தொகை ரூ. 1,203.10 இலட்சமாக உயர்த்தப்பட்டது.

(ஆ) ஈச்சம்பாடி அணைக்கட்டும் திட்டம் அரசாணை (நிலை) எண். 582, பொதுப்பணித் துறை, நாள் 25-3-1980ல் ரூபாய் 217 இலட்சத்திற்கு ஒப்புதல் வழங்கப்பட்டது. மீண்டும் திருத்திய மதிப்பீட்டின் அடிப்படையில் ரூபாய் 375 இலட்சமாக உயர்த்தப்பட்டது.

திரு. வ. முல்லைவேந்தன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாணியாறு, ஈச்சம்பாடி அணைக் கட்டுகள் கட்டி முடிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டும் கூட இது வரையில் ரெகுலர் ஸ்கிமிடம் ஒப்படைக்கப்படாமல், முறைப்படி தண்ணீர் விடப்படாத சூழ்நிலையில் விவசாயிகள் பெரிதும் பாதிப்புக்கு ஆளாகியுள்ளார்கள். அதைப்போல அந்த அணைக்கட்டுகள் கட்டி முடிக்கப்பட்டதாக அறிவிக்கப் பட்டாலும், இன்னும் பல்வேறு பகுதிகளுக்கு கால்வாய் வெட்டப்படாமலும், பிரிவு கால்வாய்கள் வெட்டப்படாமலும் இருக்கின்றன. அந்தப் பணிகளை விரைந்து முடிக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலம் ஆர்ஜிதம் செய்வதற்கு மேலும் ,25,25,000 ரூபாய் தேவை என்று மதிப்பீடு செய்யப்பட்டு அதற்கு வேண்டிய ஆயத்தப் பணிகள் நடந்து கொண்டிருக் கின்றன.

திரு. வ. முல்லைவேந்தன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அணை கட்டப்படுகின்ற நேரத்தில் குடி தண்ணீர் பஞ்சம் கடுமையாக உள்ள அந்தப் பகுதிகளுக்கு அணையிலிருந்து தண்ணீர் விடுவதற்கு, 10 மில்லியன் கன அடி தண்ணீர் விடுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாலும், அந்த அடிப்படையில், அணைக்கட்டுகளுக்கு, கால்வாய் வெட்டப் படாத ஏ. பள்ளிப்பட்டி, அதிகாரிபபட்டி போன்ற பகுதி களுக்கும் என்னுடைய தொகுதியைச் சேர்ந்த ராமையம் பட்டி போன்ற பகுதிகளுக்கும் அந்தக் கால்வாய்களை, குடி தண்ணீர் பஞ்சத்தைப் போக்குகின்ற வகையில் மீண்டும் வெட்டித்தரவும், அதைப்போல கடுமையான குடிநீர் பஞ்சத்தால் பாதிக்கப்பட்டு நெடுங்காலமாக அவதிப்படுகின்ற அரூர் பகுதிக்கு குடி நீர்வடிகால் வாரியம் மூலம் அனுமதி கிடைப்பதற்கு இந்த அணையிலிருந்து தண்ணீர் வழங்குவதற்கு அரசு உடனடியாக ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கருத்து பரிசீலிக்கப்படும்,

வண்ணாடு கிராமத்திற்கு சாலை.

*4294 திரு. ஆர். மூக்கன் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பச்சைமலையில் வண்ணாடு கிராமத்திற்கு சாலை அமைக்கும் திட்டம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் ; பேரவைத் தலைவர் அவர்களே,

பச்சைமலையில் "வண்ணாடு" பஞ்சாயத்து பகுதியிலுள்ள கிராமங்கள் வழியாக, உப்பிலியாபுரம் ஒன்றியத்தைச் சார்ந்த மேல் செங்காட்டுப்பட்டியிலிருந்து தோணூர் வரை, கி.மீ. 0/0—20/5 வரை, ரூ. 143 லட்சம் செலவில் சாலை அமைக்கும் பணிக்கு, அரசு ஆணை (நிலை) எண். 2015, சமூக நலத்துறை, நாள் : 28–10–1987-ல் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு, சாலை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. இச்சாலையில் பாதி வேலைகள் இந்த நிதியாண்டில் நடைபெறும். மீதமுள்ள பாதி வேலை அடுத்த ஆண்டிலும் முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(10-05 மணி)

திரு. ஆர். மூக்கன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியில் உள்ள வண்ணாடு, கோம்பை, தென் பெண்ணாடை ஆகிய கிராமங்களுக்குச் சாலை அமைக்கத் திட்டமிட்டுள்ளதற்காக தொகுதியின் சார்பாகவும் அனைந்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாகவும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : : சுருக்கமாக முடித்ததற்காக நானும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.